

Vol.26 | No. 12 | December 2022

The Official Organ of the Diocese of Thuckalay

# இறையருள்



26TH DIOCESAN DAY, PADANTHALUMOODU, 13.11.2022



FIRST RELIGIOUS PROFESSION & VESTITION, FCC SISTERS, KARODE, 19.11.2022



SILVER JUBILEE, PROVIDENCE HOME,
PERUMCHILAMPU, 16.11.2022



EPARCHIAL ASSEMBLY, PREPARATORY
SEMINAR, SANGAMAM, 26.11.2022



BLESSING OF OLD AGE HOME, MOOLAMATTAM
23. 11. 2022

THE OFFICIAL ORGAN OF THE DIOCESE OF THUCKALAY
VOLUME 26 No :12 DECEMBER 2022



# இறையருள்
# IRAIARUL

## Editorial Board

Patron

**His Excellency**

**Mar George Rajendran SDB**

Chief Editor

**Fr. Joseph Santhosh**

Associate Editors

**Fr. Thomas Sathianesan**
**Mr. Edwinson**
**Mr. Iyathurai**
**M.R.Merin Sujith**

Published by:

**Fr. Joseph Santhosh**
**Bishop's House**
**Post Box No . 12**
**Thuckalay - 629 175**
**K.K.Dist,Tamil Nadu,India.**

Designed by:

**Jesin J Joseph**

Printed at

**Pulari Offset Press**
**Thuckalay**
**Ph:04651-252570**

## உள்ளே...

| | |
|---|---|
| Bishop's Message | 02 |
| ஆயர் திருமுகம்-1 | 06 |
| ஆயர் திருமுகம்-2 | 08 |
| மறைக்கல்வி | 11 |
| குழந்தை ஈசோ இயக்கம் | 13 |
| இளையோர் இயக்கம் (SMYM) | 14 |
| மிஷன் லீக் இயக்கம் | 17 |
| வரவிருக்கும் நிகழ்வுகள் | 18 |
| இல்வாழ்வு இயக்கம் | 19 |
| வின்செண்ட்-தே-பவுல் சபை | 21 |
| அருட்சகோதரர்களிடமிருந்து | 22 |
| மறைமாவட்ட செய்திகள் | 23 |
| மறைவட்ட செய்திகள் | 27 |
| MONTHLY AGENDA - OCTOBER 2022 | 36 |
| BISHOP'S ENGAGEMENTS | 38 |

Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay

Email: bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

**Ref. No. Priests/GR/140/2022**

**30 November 2022**

**Dear Readers,**

Greetings and prayerful wishes Bishop's House, Thuckalay!

We are entering the month of December. It is a month of festivities in the Church - the season of Annunciation, the solemnity of the Immaculate Conception of our Blessed Mother, and finally, the solemnity of the birth of Jesus Christ. We began the season of Annunciation on 27 November 2022, the four weeks, in preparation to the feast of the Nativity of Jesus, celebrated on 25th December constitute this season. In this season we practice abstinence from 1st to 25th December in preparation for Christmas, we call this period "25 days Lent". Let us make known this practice to all our faithful and exalt them to observe the days of 25 days lent.

This season of annunciation is called 'subbara' in Syriac language. The meaning of this term is 'declaration, 'announcement' etc. What angel Gabriel announced to holy Mary was the greatest glad news to humanity that eagerly waited for the Saviour. Thus, this season is developed in the context of the mystery of incarnation completed in the fullness of time. The Church recalls during these days the announcement of the birth of John the Baptist, the predecessor of Jesus, and also the joyful event of the birth of John the Baptist. As a preparation for the celebration of the mystery of incarnation, this season also recalls creation, disobedience of our first parents and its consequences, the miserable state of the broken humanity, the promise of salvation offered by God, God's covenant with humanity, and the prophecies about the Saviour. During this season we also meditate on the role of Mary in the history of the plan of salvation.

Christmas is about a definitive moment in time, in human history, when God showed that He cared for every one of us by entering into our humanity so that He could walk with us, live with us, lead us, carry us and lift us to that better place. It is, therefore, not just about celebrations, but rather about the love of our God who wanted to become one with us so deeply, that he gave up his divinity to enter into our wretched humanity.

"Maranatha" (Rev. 22: 20) is an Aramaic (Syriac) expression that means: "Come, Lord Jesus." It was used as a greeting in the early church. When believers gathered or parted, they did not say hello or goodbye, but "Maranatha!" If we had the same spiritual outlook today, it would revolutionize the church and the lives of its members during this season. This should be our prayer and greeting during this season – come, Lord Jesus.

Christmas - the birth of God in a poor manger - is the most celebrated feast in this world. Christmas offers us all an opportunity to recapture glimpses of childhood's sacred memories. There is timelessness about gazing into the crib and coming face to face with the truth that God came down from heaven and dwelt among us as a helpless baby. The gospel story tells us that at Bethlehem on a starry night the Son of God was born. A burst of light startled the shepherds, and angels sang at his birth. It is the simplicity of this happening that captures the imagination. Christmas is more than a story that is told – it is about a birth that brings heaven right down to earth. Love came down at Christmas, broke the sacred barrier between creature and Creator and gave an eternal value to our lives. God has given us the gift of reaching beyond ourselves and discovering the joy of heaven.

There was nothing romantic about the first Christmas. Christ's birth was a hard and bitter experience for Joseph and Mary, two poor people with doors slammed in their faces. They were the picture of poverty with neither room nor lodgings; forced to shelter in a stable outside the entry walls, where animals gave up their manger for the child Jesus. The Christ who was to die on Calvary outside of Jerusalem was born outside of Bethlehem. The message is clear from the very beginning that the love of God is available to all, but especially the poor, the weak, the disadvantaged. The stable is an indication of our need to see grace and goodness in the most deprived of people. As we kneel before the crib, we can pray for the vision during this short life of ours to see things God's way and for the courage to act according to his will.

Christmas becomes meaningful when we welcome the Lord as he comes to us in the wonder of every human being and as he reveals himself in the value and dignity of every person with whom we live and work. One of the things that makes Christmas very special is being remembered by friends. It is essentially a family feast and an occasion for exchanging gifts and sharing the warmth of our homes in the company of friends. Our hearts and our thoughts are especially with family members who are absent and unable to take part in our festivities. God's presence and love can be experienced in healing misunderstandings, patching up quarrels and letting bygones be

bygones. Sometimes removing bitterness can be extremely difficult, but forgiving and forgetting will enable us to enjoy our Christmas happiness to the full.

Christmas is also about kindness, about giving and about the returning of love for love. It's the time of year when our hearts are in the right place and when we realize it is more blessed to give than to receive. We become alive and sensitive to the many needs of the poor who are crying out for our generosity and caring. Spare a thought also for those people who find the going tough and whose lives at this particular time are in the shadow of the crib because of a cross or a recent death. Our joy highlights their sadness. May your Christmas be a holy one because if it is, it will be a happy and joyful one!

On 8 December, we celebrate the solemnity of Immaculate Conception. Mary is the world's most remarkable model of an Advent figure. At a given moment in salvation history, God asked her to mother his Son. It was a demanding invitation and one which troubled her greatly. When she gave her reply to the angel Gabriel, let it be done to me according to your word, the salvation process began and from her humanity came his flesh and blood. To be worthy of such an honour, God graced her with freedom from original sin from the first moment of her conception. Mary had to be immaculate, untouched by sin from the first moment of her birth. The mother, who was carrying God's son, not for herself but for a world in need, could have no hand, act or part in sin. Mary became Christ's first disciple and the very model of what discipleship means.

The solemnity of the Immaculate Conception is a doctrinal feast, which celebrates Mary's first moment of existence, in the womb of her mother, St Anne. This feast also celebrates the humility and faith of Mary, a woman who accepted the challenge which God put before her. She is an example of what human life is capable of achieving when touched by the grace of God. Like many a mother she gave a child to the world while remaining unaware of the details of God's plan. We should not think that because Mary was free from sin her life was without struggles. She was subject to the same doubts and anguishes that we all face. Like her son, she shared all our problems and difficulties showing us the value of patience amidst our own trials, by turning sorrow and trouble into hope and joy.

Mary reminds us of the goodness of God which is the source and root of our life. What he wills for Mary he wills for all of us. In sending his Son into our world, God wanted to share the very best of Himself with us, by making us his adopted sons and daughters. God calls each of us like Mary to welcome Jesus and to make room for him in our lives. If we give him cooperation in living his word

and sharing his cross, he will shape us into a worthy dwelling place for his Son. Mary teaches us what it means to abandon ourselves completely to God's will and to be fully at his disposal. We are fortunate to call Mary our mother and to claim her as the model to imitate to the best of our ability. Of all creatures, she is the closest in love to God, nearest to his heart and everything a human being should be. Her Immaculate Conception calls us to be more freely and totally ourselves according to God's eternal plan.

Let us as we enter into this wonderful month of December, let us together with Mary prepare ourselves to welcome the child Jesus. He comes knocking. He stoops low and invites us to find him in the lowly places of this world, in the lowly places of our own life. What are the things in your life that may be crowding out Jesus? What obstacles and preoccupations leave little or no room for him? What keeps you from recognizing Jesus and opening the door wide when he comes?  If you have already opened the door to him for many years, praise God and ask the Lord to help you open wider. Even though many of us have invited Jesus in, we have given him poor accommodations, perhaps relegating him to the couch or the floor.

Hence, the message of Christmas, dear Fathers, is this: make room for Jesus. Make more and more room for him in the inn of your soul. The Scripture assures us: "Yet to all who did receive him, to those who believe in his name, he gave the power to become children of God" (Jn 1:12).  Christmas night is a night of gifts and Jesus stoops low to give us a priceless gift: the power to become children of God. However, the question is: Is there room in the 'inn' of our hearts?

We are entering the last month of the year 2022. The year has been very momentous for the Eparchy in many ways.  We have achieved much during this year.  God has been blessing us with vocations, resources, and even personnel from other Eparchies, to continue our mission work in the extended territories of the Eparchy. Let us raise our minds and hearts to God in gratitude for all the blessings that we have received throughout this year. Let me take this occasion to wish everyone a Christ-filled Christmas and a prosperous New Year 2023! With my prayers and blessings,

Yours in Christ Jesus,

BISHOP GEORGE RAJENDRAN sdb
Diocese of Thuckalay

† George Rajendran SDB

Bishop of Thuckalay

Bishop George Rajendran sdb
Diocese of Thuckalay
ஆயர் சுற்றுமடல்
Bishop's House, P B No: 12,Thuckalay PO, Kanya kumari Dt- 629 175, Tamil Nadu, India

# Circular letter No/GR/41/2022

## ஆயர் சுற்றுமடல் - 1

**ஈசோ மெசியாவில் அன்பிற்குரிய அருட்தந்தையரே! அருட்சகோதரிகளே! அன்பு இறைமக்களே! நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும், ஆண்டவராம் ஈசோ மெசியாவிடமிருந்தும் அமைதியும் அருளும் உரித்தாகுக!**

1996 ஆம் ஆண்டு நவம்பர் 11 ஆம் தேதி உருவாக்கப்பட்ட நமது மறைமாவட்டமானது, தனது இறையாட்சிப் பணியின் 26 ஆண்டுகளை இவ்வாண்டு நிறைவு செய்கிறது. நம்பிக்கை வாழ்வை ஆழப்படுத்த வேண்டும், மெசியாவின் நற்செய்திக்குச் சான்று பகர வேண்டும் என்னும் இரு பெரும் நோக்கங்களுடன் நோக்கங்களுடன் நாம் கடந்த ஆண்டு, நாம் கடந்த ஆண்டு, நமது மறைமாவட்ட உருவாக்கத்தின் வெள்ளிவிழாவை அனுசரித்தோம். கொரோனா பெருந்தொற்று சற்று ஓய்ந்த நிலையில் மஞ்சாலுமூடு பங்கில் வைத்து நிறைவு விழாவைச் சிறப்பித்தோம். கடவுள் பொழிந்த எண்ணற்ற ஆசிகளுக்கு நன்றி கூறும் நல்ல நாளாக அது அமைந்தது.

இவ்வாண்டு நவம்பர் 11 வெள்ளிக்கிழமை அன்று, அனைத்து ஆலயங்களிலும் சிறப்பு திருப்பலி ஒப்புக்கொடுத்து மறைமாவட்டத்தின் கருத்துக்களுக்காக செபிக்க வேண்டுமென இக்கடிதத்தின் தொடக்கத்திலேயே அறிவுறுத்துகிறேன்.

மேலும், இவ்வாண்டும் நாம் மறைமாவட்ட தினத்தை, மறைமாவட்ட மக்கள் அனைவரும் பங்கேற்கும் விதமாக சிறப்பாக நடத்த உள்ளோம். நவம்பர் 13, 2022 அன்று படந்தாலுமூடு திருஇருதய மறைவட்ட ஆலயத்தில் வைத்து திருப்பலியும் நம்பிக்கை வாழ்வை மையப்படுத்திய கலைநிகழ்வையும் நடத்த இருக்கிறோம். பல்வேறு விதங்களில், தமது அளப்பரிய அருளைப் பொழிந்து நம்மை வழிநடத்தும் அருட்கடலாகிய ஈசோ மெசியாவுக்கு நன்றி கூறுவதற்கும், நம்பிக்கை வாழ்வின் ஆழத்தை பரிசோதிப்பதற்கும், நற்செய்திப் பணிக்கான பொறுப்பை மறுபடியும் புதிப்பிப்பதற்கும் இந்த மறைமாவட்ட தினக் கொண்டாட்டமானது பேருதவியாக இருக்கும்.

அன்றைய தினம் பிற்பகல் 2.45 மணிக்கு, திருப்பலியானது நடைபெறும். திருப்பிலியில், சிறப்புக் காணிக்கைப் பவனி நடைபெறும். அப்பவனியில் ஒவ்வொரு பங்குகளிலிருந்தும் கைக்காரர்கள் பங்கேற்க பங்கேற்க கேட்டுக்

கொள்ளப்படுகிறார்கள். ஒரு கைக்காரர், எரிகின்ற மெழுகுதிரியை ஏந்தி வரவேண்டும். மற்றக் கைக்காரர், சிறு காணிக்கையை செலுத்தலாம். அனைத்துப் பங்குகளிலிருந்தும் பிரதிநிதிகள் தவறாமல் பங்கேற்க வேண்டும் என்பதை நினைவூட்டுகிறேன். இது ஒவ்வொரு பங்கின் விசுவாச வாழ்வை பிரதிபலிக்கும் அடையாள காணிக்கையாக அமையும்.

தொடர்ந்து நம்பிக்கை வாழ்வு மற்றம் சாட்சிய வாழ்வு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட, நடனம், பாடல், நாடகம் போன்றவற்றை உட்கொண்டதாக வண்ணமயமான ஒலி ஒளி காட்சியாக்கம் நடைபெறும். நம் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அனைத்து மக்களும் திருப்பலியில் பங்கேற்று, இக்கலை நிகழ்வை கண்டுக் களிக்க வேண்டும் என்பதே என் விருப்பம். நாம் நாம் அனைவரும் நமது பாதுகாவலியாகிய திருச்சபைத் தாய் மரியாவின் அரவணைப்பில் வாழும் கடவுளின் பிள்ளைகள் என்னும் ஒருணர்வுடன் தயக்கமின்றி பங்கேற்போம்.

மேலும், அன்பானவர்களே, அதே நாள், அதாவது நவம்பர் 13, 2022 அன்று உலக வறியோர் தினம் உலகளாவிய திரு அவையில் அனுசரிக்கப்படுகிறது. திருத்தந்தை பிரான்சிஸ், இந்நாள் உணர்த்தும் அர்த்தங்களை வெளிப்படுத்தும் விதமாக அனுசரிக்க கேட்டுக் கொண்டுள்ளார். ஆகையால் அன்றைய தினத்தை சிறப்பு செபங்கள், மற்றும் இதர ஈகைச் செயல்கள் வழியாக சிறப்பிக்க அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் கடந்த இரண்டு ஆண்டுகளாக நடத்தப்படாமல் இருந்த மறைமாவட்ட நற்செய்திக் கொண்டாட்டமானது இவ்வாண்டு நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. டிசம்பர் மாதம் 2, 3 மற்றும் 4 தேதிகளில், கல்லுவிளை சீனாய் தியான இல்லத்தில் வைத்து இது நடத்தப்படும். இத்தியானம் பயன்மிக்கதாக அமைய, முன்தயாரிப்பு செபங்களில் தனிப்பட்ட முறையில் ஈடுபட வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். பங்குகளிலும் குடும்பங்களிலும் செபிப்பதற்கான செப அட்டை சீனாய் தியான இல்லம் சார்பாக உங்கள் பங்குகளில் வழங்கப்படும்.

பெற்றுக் கொண்ட விசுவாசத்தின் ஒளியை மேலும் சுடர்மிக்கதாக்கி, இயேசுவை பறைசாற்றும் பணியில் உற்சாகமுடன் ஈடுபட அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். இறைவன் உங்களையும், உங்கள் குடும்பங்களையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக!

ஆயர் இல்லம்

01.11.2022

BISHOP GEORGE RAJENDRAN sdb
Diocese of Thuckalay

**என்றும் ஈசோ மெசியாவில்**

**மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB**

**தக்கலை மறைமாவட்ட ஆயர்**

Bishop George Rajendran sdb
Diocese of Thuckalay
ஆயர் சுற்றுமடல்
Bishop's House, P B No: 12,Thuckalay PO, Kanya kumari Dt- 629 175, Tamil Nadu, India

# Circular letter No/GR/42/2022

## ஆயர் சுற்றுமடல் - 2

**ஈசோ மெசியாவில் அன்பிற்குரிய அருட்தந்தையரே! அருட்சகோதரிகளே! அன்பு இறைமக்களே! நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும், ஆண்டவராம் ஈசோ மெசியாவிடமிருந்தும் அமைதியும் அருளும் உரித்தாகுக!**

**கன்னியாகுமரி சமூக சேவை சங்க பொன் விழா**

இறை இயேசுவில் அன்பிற்குரியவர்களே,

தக்கலை மறைமாவட்டத்தின் சமூக பணிகளை முன்னெடுக்கும் நிறுவனமான கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் ஆரம்பிக்கப்பட்டு ஐம்பது ஆண்டுகள் நிறைவு பெறுகிறது. 1972-ஆம் ஆண்டு துவங்கப்பட்ட இச்சங்கம் கடந்து வந்த 50 ஆண்டு காலத்தை நினைத்து இறைவனுக்கு நன்றி செலுத்துவோம். ஐம்பது ஆண்டுகளில் இந்த நிறுவனத்தின் வழியாக ஏராளமான தொண்டு பணிகள் செய்ய இறைவன் அருள் கூர்ந்தார். மகளிர் மேம்பாடு, கல்விப்பணி, நலவாழ்வு, குடும்ப முன்னேற்றம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, சுயதொழில் பயிற்சிகள், விழிப்புணர்வு நிகழ்வுகள் போன்ற பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வரும் இச்சங்கத்தின் வாயிலாக நமது மாவட்டத்தில் பலர் பயன்பெற்று வருகிறார்கள்.

ஆலயத்தில் தரிசிக்கும் ஆண்டவரை அயலானில் காண்பது தான் உண்மையான கிறிஸ்தவ வாழ்வு. இதுவே கிறிஸ்து நமக்கு கற்றுத்தந்த போதனை. ‘இச்சின்னஞ்சிறிய ஒருவருக்கு நீங்கள் செய்ததை எல்லாம் எனக்கே செய்தீர்கள்‘ என்ற விவிலிய கூற்றுக்கு வாழ்வு கொடுத்து வரும் நம்முடைய மறைமாவட்ட சமூக சேவை நிறுவனம் கடந்த 50 ஆண்டுகளாக பல நற்பணிகள் செய்து வந்துள்ளது.

எல்லாரும் எல்லாமும் பெற்று இன்புற்று வாழ்தலைத்தான் நம் தமிழ் மரபும் வலியுறுத்துகிறது. இதையே அறவாழ்வு என்கிறோம். தொடக்ககால கிறித்தவர்களின் வாழ்க்கை முறையும் அவ்வாறே அமைந்திருந்தது. அவர்களுக்கு எல்லாம் பொதுவாக இருந்தது. எவ்வித ஏற்றத் தாழ்வுகளும்

இல்லை. அனைவரும் சரிசமமாக நடத்தப்பட்டார்கள். புனித ஜாண் கிறிஸோஷ்டம் தன் போதனைகளில் பரிவன்பு கலந்த பகிர்வு, ஏழைகளின் தோழமையில் வாழ்வது, மனித மாண்பினை மதித்து நீதியுடன் அன்பு பணியாற்றுவது திருஅவையின் இலக்காக இருக்க வேண்டும் என்று உரைத்துள்ளார். ஆகவே சமத்துவமும் சகோதரத்துவமும் கிறிஸ்தவ வாழ்வுக்கு இன்றியமையாதவை என்னும் சமூக பார்வையை எப்போதும் திருஅவை எடுத்துரைக்கிறது. சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் அடிப்படையாகக் கொண்டு மனித மாண்பினை மதித்து சாதி, மத,இன வேறுபாடின்றி அனைவரையும் கடவுளின் பிள்ளைகளாக எண்ணி கடந்த ஐம்பது ஆண்டுகளாக கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் சிறப்பாக பணியாற்றி வருகிறது. இவ்வாறு கிறிஸ்துவின் வாழ்வியல் விழுமியங்களை குமரி மண்ணில் விதைத்துக் கொண்டிருக்கும் இச்சங்கம் தொடக்ககாலத்தில் சங்கனாச்சேரி உயர்மறைமாவட்டத்தின் குமரி திருத்தூது பணிகளுக்கும் முதுகெலும்பாக இருந்தது. இன்றும் மக்களின் ஆன்மீக வளர்ச்சியோடு இணைந்து சமூக பொருளாதார நிலைகளின் உயர்வுக்காக உழைத்து வரும் KKSSS நிறுவனத்தை இத்தனை ஆண்டுகளாக வழிநடத்தி வரும் அனைத்து அருட்தந்தையர்களையும் அருட்சகோதரிகள் பணியாளர்கள் மற்றும் நன்கொடை அளித்து உதவும் நல்லுள்ளம் படைத்த அனைவரையும் நன்றியோடு நினைத்து பாராட்டுகின்றேன்.

பொன்விழா நிறைவுக் கொண்டாட்டம் வருகின்ற டிசம்பர் மாதம் 5ஆம் நாள் கல்லுவிளை ஆசீர் அரங்கில் காலை 10 மணியளவில் நடைபெறுகிறது. இவ்விழா சிறப்புற வாழ்த்துவதோடு அனைவரது செப உதவியையும் நாடுகின்றேன்.

இரண்டாவதாக நமது மறைமாவட்டத்தில் செயல்படும் புனித வின்சென்ட் தே பவுல் சபை தக்கலை மத்திய பேரவையின் வெள்ளி விழா இவ்வாண்டு பல்வேறு செயல் திட்டங்களோடு சிறப்பாக கொண்டாடப்பட்டு வருவதை நீங்கள் அறிவீர்கள். அதன் நிறைவு விழா டிசம்பர் 11 ஆம் நாள் ஆசாரிபள்ளத்தில் நடைபெறுகிறது. வெள்ளி விழா நினைவுத் திட்டமான விடியல் அருள் அவை நடுவம் (VAAN) கட்டிட திறப்பு விழாவும் அன்றைய தினம் நடைபெறுகிறது. இந்நிகழ்வுகளில் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக புனித வின்சென்ட் தே பவுல் சபை உறுப்பினர்கள் கட்டாயம் அனைத்து நிகழ்வுகளிலும் கலந்து கொள்ள வேண்டும். பங்கேற்க இயலாதவர்கள் அதன் வெற்றிக்காக செபிக்கவும் கேட்டுக்கொள்கிறேன்.

மறைமாவட்டத்தின் இரு கரங்களாக விளங்கும் இந்த இரண்டு சமூக சேவை அமைப்புகளும் சிறப்புற செயல்பட வாழ்த்துகின்றேன். இறையாட்சி பணியில்

இன்னும் உத்வேகத்தோடு செயல்பட வேண்டிய அருளை எல்லாம் வல்ல இறைவன் வழங்க இறையருள் நாடி செபிக்கின்றேன். இறைவன் உங்கள் அனைவரையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக!

ஆயர் இல்லம்
24.11.2022

**என்றும் ஈசோ மெசியாவில்**

**மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB**
**தக்கலை மறைமாவட்ட ஆயர்**

# மறைமாவட்ட தின கொண்டாட்டம்

*2022* நவம்பர் *13*ஆம் தேதி, *26* வது மறைமாவட்ட தினமானது, படந்தாலுமூடு திரு இருதய தேவாலய வளாகத்தில் கொண்டாடப்பட்டது. மாலை *3.00* மணிக்கு மறைமாவட்ட ஆயர் தலைமையில் ஆடம்பர திருப்பலி நடைபெற்றது. தொடர்ந்து பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. இறையியலில் பட்டம் மற்றும் பட்டயப் படிப்பை வெற்றிகரமாக முடித்தவர்களுக்கு கேடயமும் சான்றிதழும் வழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சியில் அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் மற்றும் இறைமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

# மறைமாவட்ட மாமன்ற கருத்தமர்வு

தக்கலை மறைமாவட்ட முதல் மாமன்ற கருத்தமர்வு கூட்டமானது *2022* நவம்பர் *26* சனிக்கிழமை காலை *10.00* மணிக்கு தக்கலை சங்கமத்தில் மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் தலைமையில் நடைபெற்றது. சங்னைாச்சேரி உயர் மறைமாவட்டத்திலிருந்து அருட்தந்தை ஜோஸ் எட்டோலில் அவர்கள் மறைமாவட்ட மாமன்றம் குறித்த கருத்துக்களை முன்வைத்தார். இதில் அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், பல்வேறுதுறையை சார்ந்த உறுப்பினர்கள் என *36* பேர் கலந்து கொண்டனர்.




"உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்."
(மாற் 16:15)

***"இறை வார்த்தையை அறிவி, வாய்ப்பு கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் இதை செய்வதில் நீ கருத்தாய் இரு"***

***2 திமோ 4.2***

அனைவருக்கும் அன்பின் நல்வாழ்த்துக்கள்!

மறைமாவட்ட விவிலியக் கலைவிழா எழுத்து போட்டிகள்

2022 2023 ஆம் ஆண்டு மறைக்கல்வி மாணவர்களின் விவிலியக் கலைவிழா எழுத்துப்போட்டிகள் மறைமாவட்ட அளவில் 2022 நவம்பர் 6 ஞாயிற்றுக்கிழமை படந்தாலுமூடு திரு இருதய மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் வைத்து பிற்பகல் 2.30 மணி முதல் 4.30 மணி வரை நடைபெற்றது. மறைவட்ட அளவில் நடைபெற்ற போட்டிகளில் முதலிடம், இரண்டாம் இடம் பெற்ற மாணவர்கள் இப்போட்டிகளில் பங்கு பெற்றனர். போட்டிகள் அனைத்தும் இயக்குனர் அருட்தந்தை அபிலாஷ் அவர்களின் தலைமையிலும் இணை இயக்குனர் அருட்தந்தை ஜேக்கப் ஜயம்மாத்திரா அவர்களின் முன்னிலையிலும் நடைபெற்றன. மறைமாவட்ட அளவில் நடைபெற்ற போட்டிகளில் 168 மாணவர்கள் பங்கு பெற்றனர்



## Mission Quest 2022

சீரோ மலபார் திருதூது நிலையம் மற்றும் மறைத்தூது ஆணையம் இணைந்து நடத்தும் Mission Quest 2022 நமது நற்செய்தி நிலையத்தின் வாயிலாக 2022 நவம்பர் 20 ஞாயிற்றுக்கிழமை 2022 மாலை 6 மணிக்கு இணையம் வாயிலாக 45 நிமிடங்கள் நடைபெற்றது. இப்போட்டி திருச்சபை மற்றும் திருத்தொண்டு பணிகளை ஆழமாக அறிந்திட உதவும் பொருட்டு நடத்தப்பட்டது. இப்போட்டியில் வெற்றிப்பெறுவோருக்கு மறைக்கல்வி மாணவ மாணவிகள் மற்றும் பெரியோர்கள் என இரு பிரிவுகளாக பரிசுகள் வழங்கப்படும். உலகளாவிய சீரோமலபார் திருச்சபை அளவில் வெற்றி பெறுபவர்களுக்கு முதல் பரிசு 10000 ரூபாய், இரண்டாம் பரிசு 5000 ரூபாய், மூன்றாம் பரிசு 3000 ரூபாய் மற்றும் சான்றிதழ் வழங்கப்படும். மறைமாவட்ட அளவில் வெற்றி பெறுபவர்களுக்கு மறைக்கல்வி மாணவ மாணவிகள் பெரியோர் என இரு பிரிவுகளாக முதல் பரிசு 1000 ரூபாய், இரண்டாம் பரிசு 750 ரூபாய் மூன்றாம் பரிசு 500 ரூபாய், மற்றும் சான்றிதழ் வழங்கப்படும்.

இப்போட்டியில் நமது மறைமாவட்டத்தின் சார்பாக மறைக்கல்வி மாணவ மாணவிகள் பிரிவில் 114 மாணவர்களும் பெரியோர்கள் பிரிவில் 243 பேரும் பங்கு பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. பங்கு பெற்ற அனைவருக்கும் நற்செய்தி நிலையத்தின் சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம். போட்டியில் மறைமாவட்ட அளவில் மறைக்கல்வி மாணவ மாணவிகள் பிரிவில் முதலிடம் ஜெஸ்வின் S, புனித சூசையப்பர் ஆலயம், சூசைபுரம் இரண்டாம் பரிசு கிறிஸ்டி, புனித குழந்தை தெரசாள் ஆலயம், புளியரை மூன்றாம் பரிசு காவியதாஸ் புனித குழந்தை தெரசாள் ஆலயம் புளியரை. பெரியவர்கள் பிரிவில் முதல் பரிசு செல்வி ஜென்சி புனித சூசையப்பர் ஆலயம் சூசைபுரம், இரண்டாம் பரிசு திருமதி ரெஜினாபாய் புனித சூசையப்பர் ஆலயம், சூசைபுரம் மூன்றாம் பரிசு திருமதி B சிந்து ராணி புனித வியாகப்பர் ஆலயம், மாங்கரை ஆகியோர் பெற்றுள்ளனர். மறை மாவட்ட அளவில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கும் மற்றும் பெரியோர்களுக்கும் எங்கள் மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்

அருட்தந்தை. ஜேக்கப் ஐயம்மாத்ற — இணை இயக்குநர்

அருட்தந்தை.அபிலாஷ் சேவியர் — இயக்குநர்

HOLY CHILDHOOD
குழந்தை ஈசோ

# குழந்தை ஈசோ இயக்கம்

*"பிள்ளைகள் ஆண்டவர் அருளும் செல்வம், மக்கட்பேறு அவர் அளிக்கும் பரிசில்." [திபா 127: 3]*

### *குழந்தை ஈசோ இயக்கப் பொறுப்பாளர்கள் கூட்டம்*

குழந்தை ஈசோ இயக்கப் பொறுப்பாளர்களின் கூட்டம் 05-11-2022 சனிக்கிழமை மதியம் 2 மணிக்கு இணையம் வழியாக நடைபெற்றது. அருட்சகோதரி பிளஸ்ஸி அவர்களின் ஜெபத்துடன் ஆரம்பமானது. இயக்குநர் அவர்களால் வரவேற்புரை கூறப்பட்டது. கூட்டத்தில் தியானம் நடத்துவது பற்றியும் இந்த வருடம் கிறிஸ்மஸ் வாழ்த்து அட்டை வழங்குவது பற்றியும் கலந்தாலோசிக்கப்பட்டது. ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமைகளிலும் நடைபெறும் குழந்தை ஈசோ நிகழ்வுகளை அறிக்கை வடிவில் சமர்ப்பிக்க வேண்டும் என இயக்குநர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது. அருட்சகோதரி லிஷா SABS அவர்களுக்கு ஜூபிலி வாழ்த்து தெரிவிக்கப்பட்டது. இறுதியில் இயக்குநர் அவர்கள் நன்றி கூறினார்.

இப்படிக்கு<br>
அருட்தந்தை அனில் ராஜ்<br>
இயக்குநர்

---

# *Diocesan Bible Convention*

Sinai Retreat Centre, Kalluvilai

***Dates : 02-04 December 2022,***

***Friday - Sunday***

***Time: 08.30 am – 04.30 pm***

## சீரோ மலபார் இளையோர் இயக்கம் SMYM

### *தொடர் உருவாக்கல் பயிற்சி முகாம்*

தக்கலை மறைமாவட்டம் சீரோ மலபார் இளையோர் இயக்க உறுப்பினர்களுக்கான தொடர் உருவாக்கல் பயிற்சி முகாம் 2022 நவம்பர் 01 செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் ஆரம்பமானது. மறைமாவட்ட துணைச்செயலர் மெர்னிஷா வரவேற்பு கூறினார். சமூக ஆர்வலர் சகோ வெளிச்சம் ஷெரின் அவர்கள் கலந்துகொண்டு 'சமுதாயத்தில் நாம் எந்நிலையில் இருக்கிறோம், தற்போதைய சூழலில் நம்முடைய எதிர்காலம் எவ்வாறு உள்ளது' என்பதை குறித்தும் பல எடுத்துக்காட்டுகளுடன் வகுப்புகள் நடத்தினார். அதைத்தொடர்ந்து மதியம் 2.00 மணியளவில் திருச்சி டோன் போஸ்கோ வழிகாட்டி இயக்குநர் அருட்தந்தை அருள் ஆன்றணி SDB மற்றும் அருட்தந்தை ஜாண்பால் SDB ஆகியோர் கலந்து கொண்டு “மேடைப்பேச்சு கலை' பயிற்சி அளித்தனர். பின்னர் ஒவ்வொருவரையும் தனிப்பட்ட முறையில் பேச வைத்து அதில் எவ்வாறு மாற்றம் கொண்டு வர வேண்டும் என்றும் கூறினர். இறுதியில் மறைமாவட்ட தலைவர் மெர்பின் அனைவருக்கும் நன்றி கூறினார்.

### *உயிரூட்டுபவர்களுக்கான திசையமைவு பயிற்சி*

தக்கலை மறைமாவட்டத்தின் பங்கு அளவில் நடைபெற்று வரும் இயக்கத்தின் ஊக்குவிப்பாளர்களுக்கான பயிற்சி 2022 நவம்பர் 01 மதியம் 2.00 மணியளவில் கல்லுவிளை SMYM அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது. மறைமாவட்ட இளையோர்கள் இறைவணக்கம் பாடினர். தொடர்ந்து மறைமாவட்ட இணைத்தலைவர் ஜாஸ்மின் வரவேற்றுப்பேசினார். இயக்குநர் அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் தொடக்கவுரையாற்றினார். சகோதரி வெளிச்சம் ஷெரின் அவர்கள் 'ஊக்குவிப்பாளர்களின் பண்புகள் பற்றியும், இளையோர்களுக்கு தற்போதைய சூழலில் தேவைப்படுவது என்ன?' என்பது பற்றி வகுப்புகள் நடத்தினார். இறுதியில் மறைமாவட்ட துணைத்தலைவர் அஞ்சனா அனைவருக்கும் நன்றி கூறினார். இயக்கப் பாடலுடன் கூட்டம் நிறைவுபெற்றது.

### *படந்தாலுமூடு மறைவட்ட அலகு பொறுப்பாளர்கள் கூட்டம்*

படந்தாலுமூடு மறைவட்ட இளையோர் இயக்க அலகு பொறுப்பாளர்களுக்கான கூட்டமானது 2022 நவம்பர் 06 ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணியவில் படந்தாலுமூடு திரு இருதய மறைவட்ட ஆலய வளாகத்தில் நடைப்பெற்றது. ஆரம்ப செபத்துடன் கூட்டமானது ஆரம்பமானது. மறைவட்ட இயக்குனர் அருட்தந்தை சுமேஷ் அவர்கள் தலைமை தாங்கினார்.

தொடர்ந்து ஜாஸ்மின் அனைவரையும் வரவேற்றுப்பேசினார். தொடர்ந்து வளன்நகர் ஆலய பங்குதந்தை அருட்தந்தை மகேஷ் அவர்கள் “இன்றைய தலைமுறை இளைஞர்கள் நன்மை பாதையை நோக்கி செல்கிறார்களா என்பதை சில எடுத்துக்காட்டுகளுடன் கூறி நன்மை பாதையை நோக்கி தான் செல்கிறார்கள் என்பது நாம் பார்க்கும் கண்ணோட்டமாக இருக்க வேண்டும்” என்று தொடக்கவுரை வழங்கினார். அதன் பின் கிறிஸ்து பிறப்பு விழா குறித்த கலந்துரையாடல்கள் நடைபெற்றது. கலந்துரையாடலின் போது மறைவட்ட இயக்குனர் தந்தை அவர்கள் கூறியது. “இந்த வருடம் நமது மறைவட்டத்தில் கிறிஸ்து பிறப்பு விழா மறைமாவட்ட இளையோர் இயக்கம் சார்பாக நடத்தப்படுகிறது. இதற்காக நமது மறைவட்டத்தில் உள்ள இளையோர்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் எனவும் இந்த நிகழ்வை மிக சிறப்பான முறையில் செய்ய வேண்டும்” என்று கூறினார். கூட்டத்தில் எடுக்கப்பட்ட சில முக்கிய தீர்மானங்கள் :

1. இந்த வருடம் கிறிஸ்து பிறப்பு விழாவானது படந்தாலுமூடு மறைவட்டம் தெற்றியோடு, புனித பவுல் ஆலய வளாகத்தில் வைத்து நடத்தலாம் என்று தீர்மானிக்கப்பட்டது.
2. கிறிஸ்துமஸ் விழாவுக்கான தலைப்பு GLORIA-22
3. கிறிஸ்து பிறப்பு விழா 18.12.2022 அன்று நடத்தலாம் என்று தீர்மானிக்கப்பட்டது.
4. கிறிஸ்து பிறப்பு பாடல் மற்றும் குறும்பட போட்டிகள் நடத்தலாம் என்று தீர்மானிக்கப்பட்டது.
5. நிகழ்வுகள் மறைவட்ட பங்கு இளையோருக்கு பகிர்ந்து வழங்கப்பட்டது. அவை
    a. வரவேற்பு - தெற்றியோடு
    b. இறைவணக்கம் – படந்தாலுமூடு
    c. வரவேற்புரை - அண்ணிக்கரை
    d. நடனம் – பளுகல்
    e. நன்றியுரை - வளன்நகர்

மேலும் இது குறித்த கலந்துரையாடல் நடைபெற்றது. அதில் மறைமாவட்ட பொறுப்பாளர் செல்வன் அஜித் போட்டிகள் குறித்த சில வழிமுறைகளையும் கூறினார். அதன்பின் TYES ஒருங்கிணைப்பாளர் ஸ்டார்வின் கூறுகையில் Don Bosco வழிகாட்டி மூலமாக நமது மறைமாவட்டத்தில் மிகச் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதனை பங்கு பொறுப்பாளர்கள் தங்களது பங்குகளில் உள்ள மாணவர்கள், இளையோர்கள் அனைவருக்கும் எடுத்துக் கூற வேண்டும் என்று கூறினார். இறுதி செபத்துடன் கூட்டமானது இனிதே முடிவடைந்தது.

### *மறைமாவட்ட நடுவண் செயற்குழு கூட்டம்*

தக்கலை மறைமாவட்ட SMYM நடுவண் செயற்குழு கூட்டமானது, நவம்பர் 27 ஞாயிற்றுக்கிழமை மதியம் 2.30 மணியளவில் தெற்றியோடு புனித பவுல் ஆலய வளாகத்தில் நடைபெற்றது. மறைமாவட்ட இயக்குநர் அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் தலைமை தாங்கினார். கூட்டத்தில் பகிரப்பட்டவை.

1. அலகு சந்திப்புகளில் நடந்த அனுபவங்கள்.
2. டிசம்பர் 18 நடைபெறவுள்ள Gloria 22 மற்றும் ஆண்டுவிழா நிகழ்வுகளில் முன்னின்று நடத்த வேண்டும், அதற்கான பொறுப்புகள் பகிர்ந்தளிக்கப்பட்டது.
3. முன்னாள் மற்றும் இந்நாள் மறைமாவட்ட நடுவண் செயற்குழு உறுப்பினர்களுக்கான சந்திப்பு டிசம்பர் 27 செவ்வாய்க்கிழமை மதியம் 3 மணிக்கு கல்லுவிளை SMYM அலுவலகத்தில் நடத்தலாம் என்று தீர்மானிக்கப்பட்டது.
4. கிறிஸ்து பிறப்பை முன்னிட்டு Youtube Cover Dance நடத்த வேண்டும் என்று ஆலோசிக்கப்பட்டது.

பின்னர் இறுதி ஆசீருடன் கூட்டம் நிறைவடைந்தது.

### *அலகு சந்திப்பு*

தக்கலை மறைமாவட்ட சீரோ மலபார் இளையோர் இயக்கத்தின் செயற்குழு உறுப்பினர்கள் தற்போது பங்குகளவில் நடைபெறும் அலகுகளை பார்வையிட்டு வருகின்றனர். ஞாயிற்றுகிழமைகளில் அந்தந்த பங்குகளில் திருப்பலியில் பங்கேற்று அலகு சந்திப்பு நடைபெற்று வருகிறது. 06.11.2022




அன்று காரோடு மற்றும் பள்ளிக்கோணம் ஆலயத்திலும், 27.11.2022 அன்று களியல், மாறப்பாடி, குலசேகரம் மற்றும் சேனங்கோடு ஆலயத்திலும் நடைபெற்றது.

**இவண்**

**மெரின் சுஜித், செயலர்**

சிறுமலர் MISSION LEAGUE

# மிஷன் லீக் இயக்கம்

சிறுமலர் மிஷன்லீக் இயக்க தமிழ்நாடு மண்டல அளவிலான தேர்தல் 2022 நவம்பர் 5 ஆம் தேதி இராமநாதபுரம் மறைமாவட்டத்தில் Pastoral centre ல் வைத்து நடைபெற்றது.

அதில் தமிழ்நாடு மாநில துணை இயக்குனராக அருட்தந்தை பிரிண்டோ குரியாஸ்,

| | |
|---|---|
| Vice-President | - Mrs. Sneha Latha |
| Secretary | - Mrs. Vijilvani |
| Organiser | - Mr. Mahesh |
| Regional Organiser | - Mr. Aju Thomas |
| National Representative | - Mrs. Latha |
| Ex. Members | - Mrs. Ajitha, Mr. Adhik |

ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். மிஷன் லீக் இயக்க தேசிய தலைவர் செயலர் மற்றும் பொறுப்பாளர்களான அருட்தகோதரி ஆன்கிரேஸ் மற்றும் திரு.ஞானதாஸ் ஆகியோர் உடனிருந்தனர்.

4- 11 -2022 அன்று கயத்தாறு மறைத்தொண்டு தளத்தைச் சந்தித்து அருட்தந்தை ஜோமோன் மற்றும் அருட்சகோதரிகள் மக்களுடன் கலந்துரையாடி தேனீர் உண்டு மகிழ்ந்தனர். அருட்தந்தை பிரிண்டோ குரியாஸ், அருட்தகோதரி ஆன்கிரேஸ், திரு ஞானதாஸ், அஜூ தோமஸ், திரு மகேஷ், திருமதி ஸ்னேகலதா ஆகியோர் உடனிருந்தனர்.

மிஷன் லீக் இயக்க பவள விழாவை முன்னிட்டு எழுச்சிப் பயணம் மறைவட்ட ஆலயங்களில் துவங்கி ஒவ்வொரு பங்காக வலம் வந்து கொண்டிருக்கிறது. அதற்காக உழைக்கின்ற அனைவருக்கும் வாழ்த்துக்களும் பாராட்டுக்களும். பவள விழாவின் நிறைவு விழா நமது மறைமாவட்டத்தில் நடைபெறுவதைத் தொடர்ந்து அதற்கான ஆயத்த நிகழ்வுகள் மேதகு ஆயர் தலைமையில் நவம்பர் 20, 2022 அன்று நடைபெற்றது. படந்தாலுமூடு திருஇருதய ஆலய வளாகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் குருகுல முதல்வர் மறைமாவட்ட, மறைவட்ட இயக்குநர் தந்தையர்கள் துணை இயக்குநர் அருட்சகோதரிகள் மற்றும் மறைமாவட்ட பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர். விழா சிறப்புற அமைய



தேவையான ஆலோசனைகள் மற்றும் பொறுப்புகள் பற்றி கலந்துரையாடப்பட்டு பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டன. பின் ஆயர் அவர்களின் இறுதி ஆசீருடன் கூட்டம் நிறைவு பெற்றது. அனைவருக்கும் தேனீர் வழங்கப்பட்டது


**அருட்தந்தை பிரிண்டோ குரியாஸ்**
**இயக்குநர்**

---

# வரவிருக்கும் நிகழ்வுகள்

| | |
|---|---|
| நற்செய்தி பெருவிழா,கல்லுவிளை | - டிசம்பர் 02-04 |
| KKSSS பொன்விழா, கல்லுவிளை | - டிசம்பர் 05 |
| அன்பு இல்ல சிற்றாலய மந்திரிப்பு, தென்காசி | - டிசம்பர் 07 |
| புனித வின்சென்ட் தே பவுல் வெள்ளிவிழா கொண்டாட்டம், ஆசாரிப்பள்ளம் | - டிசம்பர் 11 |
| அருட்தந்தை. தோமஸ் தெக்கேல் நினைவுதினம் | - டிசம்பர் 14 |
| CRI உறுப்பினர்களின் கிறிஸ்துமஸ் கொண்டாட்டம் | - டிசம்பர் 17 |
| குருக்களுக்கான கூட்டம் மற்றும் கிறிஸ்துமஸ் கொண்டாட்டம் | - டிசம்பர் 19 |

# இல்வாழ்வு இயக்கம்



***இம்மானுடத்தின் பாவத்தை போக்க மானிடனாய் வந்தார் இயேசு. சிலுவையை சுமக்க வேண்டும் என்பதை அறிந்தே அவதரித்தார் அவர். கொண்டாடுவோம் இந்த கிறிஸ்துமசை. அவர் மீண்டும் வருகிறார் நமக்காக என்னும் நம்பிக்கையில்...***

குடும்பங்கள் ஆன்மீகம் நிறைந்தவையாகத் திகழ்ந்தால்தான் இன்றைய சவால்களைச் சந்திக்க முடியும். குடும்பங்களின் ஆன்மீகமானது, இறை நம்பிக்கை, நற்செயல், நல்லுறவு, நற்செய்தி அறிவிப்பு என்னும் நான்கு தூண்களின் மேல் கட்டப்பட வேண்டும். ஒவ்வொரு குடும்பமும் நாள்தோறும் செபித்து இறைவார்த்தையின்படி அருள்சாதனங்களில் பங்கேற்று வாழ்வதே இறைநம்பிக்கையின் வெளிப்பாடு. தாங்கள் நேர்மையுடனும், கடமையுணர்வுடனும் நேர்த்தியாக ஆற்றுவது நற்செயலின் வெளிப்பாடு. பல்வேறு விதமான உறவுகளில் பாராட்டு, மன்னிப்பு, விட்டுக்கொடுத்தல், இழத்தல் போன்ற பண்புகளில் வளர்வது உறவின் வெளிப்பாடு. இறுதியாக திருமுழுக்கு பெற்ற ஒவ்வொருவரும் நற்செய்தி அறிவிக்கும் கடமையுடையவர்கள் என்னும் நிலையில் தங்களால் இயன்ற விதத்தில் நற்செய்திக்கு சான்று பகர்ந்து வாழ்வது நற்செய்தி அறிவிப்புப் பணியின் வெளிப்பாடு. இந்த நான்கு தளங்களிலும் நிறைவு பெறும் குடும்பங்களே ஆன்மீகம் நிறைந்த குடும்பங்களாக விளங்க முடியும். திருவிவிலியத்தில் பார்க்கும் போது ஆன்மீக நிறைந்த குடும்பமாக திருக்குடும்பம் திகழ்ந்தது. அத்திருக்குடும்பத்தை பின்பற்றி நமது குடும்பங்களை ஆன்மீகம் நிறைந்த குடும்பங்களாக மாற்ற இல்வாழ்வு இயக்கம் உறுதுணையாக இருந்து வருகிறது. குடும்பங்களை இறைவழியில் கொண்டு செல்லும் நோக்குடன் நவம்பர் 21 முதல் புனித ஜார்ஜியர் ஆலயம், ஆனையடி பங்கில் இல்வாழ்வு இயக்கத்தின் சார்பாக Home Mission நடைபெற்று வருகிறது.

***மாதர் ஜோதிஸ் இயக்கம்***

மாதர் ஜோதிஸ் இயக்கம் சார்பாக கிராமிய நடனப் போட்டி நவம்பர் 5 ம் தேதி சனிக்கிழமை நடைபெற்றது. நடன போட்டி KKSSS வளாகத்தில் அமைந்த ஆடிட்டோரியத்தில் நடைபெற்றது. தொடக்க நிகழ்வில் அருட்தந்தை

எபின் பூவத்துமூட்டில் அவர்கள் சிறப்பு விருந்தினராக வருகைப்புரிந்து குத்துவிளக்கு ஏற்றி தொடங்கி வைத்தார்கள். கிராமிய நடனப் போட்டியானது ஆசீர் ஆடிட்டோரியத்தில் நடத்தப்பட்டது. இப்போட்டி காலை 11.15 மணி முதல் மதியம் 2 மணி வரை நடைபெற்றது. இப்போட்டியில் 12 குழுவினர் பங்கேற்று நடனம் ஆடியினர். மறைமாவட்ட அளவில் புனித சூசையப்பர் ஆலயம் சூசைபுரம் முதலிடத்தையும், புனித தோமையார் ஆலயம் மாறப்பாடி



இரண்டாவதும், திருக்குடும்ப ஆலயம் தக்காளிவிளை மற்றும் புனித மரியன்னை ஆலயம் தக்கலை மூன்றாவது இடங்களையும் பெற்றனர். இவர்களுக்கு மாதர் ஜோதிஸ் இயக்கம் சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்து கொள்கின்றோம். இப்போட்டியில் பங்கேற்ற அனைவருக்கும் ஆண்டுவிழாவின் போது பரிசுகள் வழங்கப்படவுள்ளது. 20-11-2022 இயக்குநர் அருட்தந்தை ஜிம்மி தெக்கேகடுமத்தில் அருட்சகோதரி றோஸ் சீரியன்கண்டத் CHF மற்றும் ஜூலிட் சுனில் அவர்கள் இணைந்து புனித லொரேட்டோ ஆலயம் பிலங்கரை பங்கை சார்ந்த தாய்மார்களை பார்வையிட்டு ஒரு மணி நேரம் வகுப்புகள் நடத்தினர். இக்கூட்டத்தில் சுமார் 47 பேர் கலந்து கொண்டனர். மேலும் அன்றய தினம் புனித பாத்திமா ஆலயம் குடுக்கச்சிவிளை தாய்மார்களை பார்வையிட்டு நிறை குறைகளை கேட்டறிந்தார். பின்னர் அவர்களுக்கு குடும்ப வாழ்வை இறைவழியில் எவ்வாறு கொண்டு செல்ல வேண்டும் என்ற வகுப்புகள் நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில் சுமார் 15 தாய்மார்கள் கலந்து கொண்டனர். மாதர் ஜோதிஸ் இயக்கம் சார்பாக கரோல் குழுப்பாடல் போட்டி மற்றும் கிறிஸ்துமஸ் Gathering டிசம்பர் 17 ம் தேதி கல்லுவிளை இல்வாழ்வு இயக்கத்தில் வைத்து நடைபெறும்.

***அருட்தந்தை ஜிம்மி தெக்கேகடுமத்தில்***

***இயக்குநர்***




# வின்சென்ட்- தே-பவுல் சபை

### *அருட்சகோதரிக்கு வரவேற்பு*

மஞ்சாலுமூடு கிளைச் சபையின் முன்னாள் தலைவரும் மத்திய சபையின் பொறுப்பாளராக பணிபுரிந்து வரும் திரு.செல்வன் அவர்களின் மூத்த மகளான பெனிஷ்மா தெரஸ் 19-11-2022 அன்று அருட்சகோதரியாக முதல் வார்த்தைப்பாடு ஏற்றார். அருட்சகோதரியின் வரவேற்பு நிகழ்ச்சி மஞ்சாலுமூடு ஆலயத்தில் 27-11-2022 அன்று திருப்பலி முடிந்தவுடன் ஆரம்பமானது. இந்நிகழ்ச்சியில் வின்செந்தியர்கள் சார்பாக அருட்சகோதரிக்கு வாழ்த்து மடல் வழங்கப்பட்டது. இதில் கிளை சபையை சார்ந்த எல்லா உறுப்பினர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

### *வெள்ளி விழா நினைவு விவிலிய பவனி*



தக்கலை மத்திய சபையின் வெள்ளி விழாவையொட்டிய "திருவிவிலிய ஒளிச்சுடர்" களியல் வட்டார சபையிலிருந்து 30.10.2022 முதல் தக்கலை - பிலாங்கலை வட்டார சபைக்குட்பட்ட ஆலயங்களில் பவனியாக எடுத்து செல்லப்பட்டு செபம் செய்து வருகிறார்கள்.

D. P. ஷாஜி

தகவல் தொடர்பு அலுவலர்

# அருட்சகோதரர்களிடமிருந்து

***"அன்பு என்பது ஏற்றுக்கொள்வது. நீங்கள் ஒருவரை விரும்பும் போது.. நீங்கள் அவர்களை உங்கள் இதயத்தில் எடுத்துக்கொள்கிறீர்கள், அதனால்தான் நாம் விரும்பும் ஒருவரை இழக்கும்போது அது மிகவும் வலிக்கிறது, ஏனென்றால் நம்மில் ஒரு பகுதியை இழக்கிறோம்.***

***-புனித ஆண்ட்ரூஸ்***

நவம்பர் 1 அனைத்து நவம்பர் 2 புனிதர்கள் தினம் மற்றும் அனைத்து ஆன்மாக்கள் தினம் பெரும்பாலான குருமடங்களில் புனிதமான முறையில் கொண்டாடப்பட்டது.

அந்தந்த குருமடங்களில் சமூக தினக் கொண்டாட்டம் நடைபெற்றது. இதில் பல கலை மற்றும் விளையாட்டு போட்டிகள் நடைபெற்றன

நமது மறைமாவட்ட திருத்தொண்டர்கள் தங்கள் குருத்துவ உருவாக்கல் பயிற்சியை வெற்றிகரமாக முடித்து, நமது மறைமாவட்டத்தில் திருத்தொண்டு பணியைத் தொடங்கியுள்ளனர். அதன்படி சகோ பிரின்ஸ் நாகர்கோவில், சகோ லிஜூ நித்திரவிளை, சகோ அஜின் விருதுநகர், சகோ ஜார்ஜ்குட்டி சூசைபுரம் பங்குகளில் தங்கள் களப்பணிப் பயிற்சியைத் தொடங்கியுள்ளனர். அவர்கள் பயிற்சியை வெற்றிகரமான முடிக்க இறைவனை வேண்டுவோம்.

குருமடங்களில் நடைபெறும் நாடகப் போட்டிகளில் அருட்சகோதரர்கள் ஆர்வத்துடன் கலந்து கொள்கின்றனர்.

2022 நவம்பர் 5 ஆம் தேதி, ஆலுவா குருமடத்தில் சலேசிய மாகாண அளவிலான ஜூபிலி கொண்டாடப்பட்டது. நிகழ்வில் மாகாண அதிகாரிகள் (பெங்களூரு SDB) பங்கேற்றனர். இது சிறப்பு அனுபவமாக அமைந்தது.

அனைத்து சகோதரர்களும் குருத்துவ பயிற்சிகளில் ஆர்வத்துடன் பங்கேற்கிறார்கள், அவர்களின் பயிற்சிகள் பயன்மிக்கதாய் அமையத் தொடர்ந்து செபியுங்கள்.

**சகோ ஆண்டனி தகிடியேல்**

# கன்னியாகுமரி
## சமூக சேவை சங்கம்

### KKSSS ஓவியப் போட்டி,

ஓவியம் வரைவதன் மூலம் திறமைகளையும் படைப்பாற்றலையும் வெளிப்படுத்தும் வகையில் கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் பொன்விழா கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக, 01 நவம்பர் 2022 அன்று கல்லுவிளையில் ஓவியப் போட்டி நடைபெற்றது. இதில் மாவட்டத்தின் பல்வேறு பள்ளிகளைச் சேர்ந்த மாணவ, மாணவியர் கலந்து கொண்டனர். வெற்றி பெற்றவர்களுக்கு ரொக்கப் பரிசு வழங்கப்பட்டது.

### KKSSS வர்ணம் போட்டி

குழந்தைகள் தின விழாவையொட்டி கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் சார்பாக 2022 நவம்பர் 10 அன்று பள்ளி மாணவர்களுக்கான பள்ளிகளுக்கு இடையேயான "VARNAM 2022" ஓவியப் போட்டி நடைபெற்றது. கருங்கல் புனித அல்போன்சா கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் முதல்வர் Dr. S. இசையாஸ் நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்தார். இப்போட்டியில் 700 க்கும்



மேற்பட்ட மாணவர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு தங்களது திறமைகளை வெளிப்படுத்தினர். போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. அருட்தந்தை எபி பூவத்துமூட்டில் இதற்கான ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தார்.

### KKSSS நடனப்போட்டி

2022 நவம்பர் 12 அன்று கல்லுவிளையில் சுய உதவி குழுக்களுக்கான நடனம் மற்றும் பாடல் போட்டிகள் நடைபெற்றன. பாடல் போட்டியில் 21 குழுக்களும், நடனப் போட்டியில் 13 குழுக்களும் பங்கேற்றன. பாட்டுப் போட்டிகளில் மஞ்சாலுமூட்டைச் சேர்ந்த தெய்வீக SHG முதல் பரிசும், நடனப் போட்டியில் முஞ்சிறை அணி முதல் பரிசும் பெற்றன. பொன்விழா சின்னம் என்ற தலைப்பில் கோலம் போட்டியும் நடத்தப்பட்டது. 52 SHG குழுக்கள் பொன்விழா சின்னத்தை வண்ணமயமான ஓவியத்தின் மூலம் சித்தரிக்கும் போட்டியில் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.

## மறைமாவட்டச் செய்திகள்

### அருட்பணி பேரவை கூட்டம்

தக்கலை மறைமாவட்ட அருட்பணிபேரவை கூட்டமானது 2022 நவம்பர் 01 காலை 10.00 மணிக்கு தக்கலை சங்கமத்தில் வைத்து நடைபெற்றது. குருகுல முதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பௌவத்துப்பறம்பில் தலைமை வகித்தார். அமைப்பு சாரா தொழிலாளர்களின் உரிமைகள் மற்றும் கடமைகள் குறித்து வழக்கறிஞர் தென்பாண்டியன் மற்றும் அருட்தந்தை ஜாண் பால் SDB ஆகியோரால் வகுப்புகள் நடத்தப்பட்டது. இதில் 63 உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். அருட்தந்தை தோமஸ் சத்தியநேசன் மற்றும் செயலாளர் திரு. ஜான் குமரிதோழன் இதை சிறப்பாக ஒருங்கிணைத்திருந்தனர்.

### LSDP வெள்ளிவிழா கொண்டாட்டம் – பெருஞ்சிலம்பு

'லிட்டில் சர்வண்ட்ஸ் ஆப் தி டிவைன் பிராவிடன்ஸ்' (LSDP) பிராவிடன்ஸ் ஹோம் வெள்ளி விழாவின் நிறைவு விழா 16 நவம்பர் 2022 அன்று காலை 10.00 மணிக்கு பெருஞ்சிலம்பில் உள்ள

பிராவிடன்ஸ் இல்லத்தில் நடைபெற்றது. ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் தலைமையில் நன்றி திருப்பலியும் தொடர்ந்து ஆயர் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. LSDP சபையின் மாகாண தலைவி அருட்சகோதரி ரோஸ்லி LSDP அவர்களுடன் அருட்சகோதரிகள் வருகை புரிந்தனர். மேலும் இந்நிகழ்ச்சியில் நமது மறைமாவட்ட அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் மற்றும் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

### துறவற முதல் வார்த்தைப்பாடு

FCC தக்கலை, சான்ஜோ மாகாணத்தின் நான்கு அருட்சகோதரிகள் துறவற முதல் வார்த்தைப்பாடு பெற்றுக்கொண்டனர். இந்நிகழ்வு 2022 நவம்பர் 19, காலை 10 மணிக்கு காரோடு புனித சூசையப்பர் தேவாலயத்தில் நடைபெற்றது. மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB தலைமையில் திருப்பலியுடன் இந்நிகழ்வு ஆரம்பமானது. சகோதரிகள் மஜிதா, அபிஷா, மெரின் சுஜூ மற்றும் பெனிஷ்மா தெரஸ் ஆகியோர் தங்களது முதல் வார்த்தைப்பாட்டை ஏற்றனர். இவ்விழாவை காரோடு ஆலய பங்குதந்தை அருட்தந்தை அஜீஷ் அட்டியில் சிறப்பாக ஒருங்கிணைத்திருந்தார்.

### ஹோம் மிஷன் – பளுகல்

2022 அக்டோபர் 31 முதல் நவம்பர் 19 வரை, தலச்சேரி, புனித சூசையப்பர் மாகாணத்தைச் சேர்ந்த SABS துறவற சபையின் அருட்சகோதரிகள் பளுகல் புனித தோமையார் ஆலயத்தில் ஹோம் மிஷன் நிகழ்ச்சியை நடத்தினர். 10 சகோதரிகள் கொண்ட குழு அக்டோபர் 31 அன்று வந்து மூன்று வாரங்களில் பங்கிலுள்ள அனைத்து குடும்பங்களையும் சந்தித்து, இளைஞர்களுக்கான



கருத்தரங்கு, குழந்தைகள் மற்றும் பெரியவர்களுக்கு நற்கருணை ஆராதனை போன்றவை நடைபெற்றது. 19 ஆம் தேதி, மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB தலைமையில் திருப்பலியுடன் நிறைவு பெற்றது.

### முதியோர் இல்ல மந்திரிப்பு – மூலமற்றம்

மூலமற்றத்தில் திருமதி மெர்சி ஜோஸ் அவர்கள் வழங்கிய இடத்தில் மூத்த குடிமக்களுக்கான இல்லம் கட்டப்பட்டது. இதன் மந்திரிப்பு 2022 நவம்பர் 23 அன்று மாலை 4.00 மணிக்கு நடைபெற்றது. தக்கலை மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் தலைமை வகித்தார். ஓசூர் மறைமாவட்ட ஆயர் செபாஸ்டியன் பொழோலிபரம்பில் அவர்கள் திருப்பலி நிறைவேற்றினார். இதற்கான அனைத்து நிகழ்வுகளையும் அருட்தந்தை ஜினோய் தோமஸ் அவர்கள் சிறப்பாக செய்திருந்தார்.

### ஜோதி உயிரூட்டல் மையம் திறப்பு விழா

OMMI அருட்சகோதரிகளின் பொன்விழா கொண்டாட்டத்தின் நிறைவுவிழா படந்தாலுமூட்டில் 2022 நவம்பர் 25 காலை 10.00 மணிக்கு நடைபெற்றது. இதன் ஒருபகுதியாக புதிதாக கட்டப்பட்ட ஜோதி பயிற்சி மையத்தின் திறப்புவிழா ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் குழித்துறை மறைமாவட்ட தொடர்பாளர் பேரருட்தந்தை ஜேசுரெத்தினம், மார்த்தாண்டம் குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ்பிரைட் மற்றும் தக்கலை மறைமாவட்ட அருட்தந்தையர்கள் பலர் கலந்து கொண்டனர்

### சங்கமம் கார்மென்ஸ் முதல் ஆண்டுவிழா

தக்கலை சங்கமம் கார்மென்ஸ் முதலாம் ஆண்டு விழா 2022 நவம்பர் 28 அன்று சங்கமத்தில் நடைபெற்றது. சங்கமம் மற்றும் KKSSS இயக்குநர்கள் மற்றும் ஊராட்சித் தலைவர் முன்னிலையில், தக்கலை மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் குத்துவிளக்கேற்றி கூட்டத்தை துவக்கி வைத்தார். பணியாளர்களின் கலாச்சார நிகழ்வுகள் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் சுமார் 75 பேர் கலந்து கொண்டனர்.

# மறைவட்டச் செய்திகள்

## படந்தாலுமூடு

### திரு இருதய மறைவட்ட ஆலயம் – படந்தாலுமூடு

4.11.2022 (முதல் வெள்ளி) அன்று காலை 9 மணி முதல் 6 மணி வரை தொடர்ச்சியாக நற்கருணை ஆராதனை நடைபெற்றது. மாலை 6 மணிக்கு திருப்பலியும் அதைத்தொடர்ந்து நற்கருணை ஆசீர்வாதமும் நடைபெற்றது. பின்பு அனைவருக்கும் நேர்ச்சைக் கஞ்சி வழங்கப்பட்டது

### புனித மார்டின் டி போரஸ் ஆலயம் – கழுவன்திட்டை

கழுவன்திட்டை புனித மார்டின்-டி-போரஸ் ஆலய திருவிழாவானது அக்டோபர் 30 முதல் நவம்பர் 7 முடிய 9 நாட்கள் கொண்டாடப்பட்டது. அக்டோபர் 30-ஆம் தேதி மாலை 6 மணிக்கு திருக்கொடியேற்றத்துடன் திருவிழாவானது ஆரம்பமானது. இத்திருவிழா நாட்களில் ஜெபமாலை பாதுகாவலரின் நவநாள் முதல் திருவிருந்து திருப்பலி மற்றும் நேர்ச்சைவிருந்து ஆகியவை நடைபெற்றது. நற்செய்தி பெருவிழா மற்றும் ஒப்புரவு வழிபாடும் நடைபெற்றது ஐந்தாம் நாள் தேர்பவனியும் நடைபெற்றது அனைத்து பக்த இயக்கங்களின் ஆண்டு விழாவும் மிகச் சிறப்பான முறையில் நடைபெற்றது. திருவிழாவின் இறுதி நாள் திருக்கொடி இறக்குதல் மற்றும் இறந்தோருக்கான நினைவு திருப்பலியும் நடைபெற்றது அனைத்து மக்களும் திருப்பலி மற்றும் ஜெப வழிபாடுகளில் மிகுந்த பக்தியுடன் கலந்து கொண்டு இறையாசீர் பெற்றுக் கொண்டனர்.



### புனித சூசையப்பர் ஆலயம் – வளன்நகர்

29.11.2022 அன்று மாலை 6 மணிக்கு திருப்பலியை தொடர்ந்து 'கிறிஸ்தவ குடும்பங்கள் நம்பிக்கையில் வேரூன்றிட' என்ற மையச்சிந்தனையில் ஒரு கருத்துப் பகிர்வு திரு எட்வின்சன் அவர்களால் இறைமக்களுக்கு

வழங்கப்பட்டது. தொடர்ந்து நற்கருணை ஆராதனை அருட்தந்தை மகேஷ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இறுதியில் அனைவருக்கும் நேர்ச்சை உணவு வழங்க்பபட்டது.

## மஞ்சாலுமூடு

### புனித பெனடிக் ஆலயம் – பென்கிரி



புனித பெனடிக் ஆலயம் பென்கிரியில் மிஷன் லீக் எழுச்சி பயண Emblem 2022 நவம்பர் 06 ஞாயிற்றுக்கிழமை வருகை தந்தது

## தக்கலை–பிலாங்காலை

### புனித குழந்தை தெரசாள் மறைவட்ட ஆலயம் – பிலாங்காலை

நவம்பர் மாதம் 27 ம் தேதி பொன்விழா சிறப்பிக்கும் விதமாக மேதகு ஆயர் அவர்கள் திருப்பலி நிறைவேற்றினார்கள். அன்றைய தினம்



திருப்பணியாளர்கள் திருப்பலியை சிறப்பித்தார்கள். இறுதியில் ஆயர்

அவர்கள் ஆசி வழங்கினார்கள். பங்குதந்தை விழா ஏற்பாடுகளை முன்னின்று நடத்தினார்.

### புனித ஜார்ஜியர் ஆலயம் – ஆனையடி

ஆனையடி தூய ஜார்ஜியார் ஆலயத்தில் நவம்பர் மாதம் கிறிஸ்து அரசர் திருவிழா மிகச்சிறப்பாக கொண்டாடப்பட்டது. மிஷன் ஞாயிறு சிறப்பிக்கும் விதமாக மிஷன்லீக் மாணவர்கள் வீடு வீடாக சென்று பொருட்கள் சேகரித்தனர். அந்த பொருட்கள் ஏலம் போடப்பட்டது. விவிலிய வினாடி-வினாப் போட்டி நடத்தப்பட்டு பரிசு வழங்கப்பட்டது. தொடர்ந்து மாணவர்கள் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது.

## களியல்

### புனித சூசையப்பர் ஆலயம் – காரோடு

காரோடு புனித சூசையப்பர் ஆலயத்தில் பணிபுரிந்த அருட்கன்னியர்களின் பொன்விழா மற்றும் புதிதாக நித்திய வார்த்தைப்பாடு பெற்ற அருட்சகோதரிகளின் வரவேற்பு நிகழ்ச்சி 2022 நவம்பர் 27 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இளங்குருமட அதிபர் அருட்தந்தை ஜோகி மரங்காட் CMI அவர்கள் சிறப்புரையாற்றினார். துறவற வாழ்வில் பொன்விழா கொண்டாடும் அருட்சகோதரி ட்ரீசா SDS, அருட்சகோதரி சல்மா SDS மற்றும் FCC புதிய அருட்சகோதரிகள்



கலந்து கொண்டனர். மறைக்கல்வி ஆசிரியர்கள் இதனை சிறப்பாக ஒருங்கிணைத்திருந்தனர்

### புனித இரண்டாம் ஜாண் பால் ஆலயம் – குலசேகரம்

அக்டோபர் மாதம் 21 ம் தேதி பங்குத்தந்தை அருட்தந்தை ஜோஸ் அவர்கள் தலைமையில் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது, முதல் நாள் திருப்பலியை களியல் மறைவட்ட முதன்மை பணியாளர் அருட்தந்தை டினு அவர்களும் இரண்டாம் நாள் திருப்பலியை முன்னாள் பங்குதந்தை அருட்தந்தை ஷாஜன் அவர்களும் 3 ம் நாள் திருப்பலியை தக்கலை மறைமாவட்டத்தின் ஆவணக்காப்பாளர் பேரருட்தந்தை ஜோஷி அவர்களும் நிறைவேற்றினர். 3 ஆம் நாள் திருப்பலிக்கு பின் அன்பின் விருந்தும் உறவிய ஆண்டு விழாவும் நடைபெற்றது. 24-10-2022 அன்று இறந்தோருக்கான திருப்பலியுடன் கொடியிறக்கப்பட்டது.

2022 நவம்பர் 20 ஞாயிற்றுக்கிழமை அன்று மிஷன் ஞாயிறை முன்னிட்டு ஏலவிழா பங்குத்தந்தை அருட்தந்தை ஜோஸ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இதில் பங்கு மக்கள் அனைவரும் தங்களால் முடிந்த பொருட்களை கொண்டு வந்தனர். இறுதியில் பங்குத்தந்தை அனைவருக்கும் நன்றி கூறினார்.

### திருஇருதய ஆலயம் – பள்ளிக்கோணம்

உறவியங்களின் ஆண்டுவிழா 27-11-2022 அன்று மிகச்சிறப்பாக நடைபெற்றது. தக்கலை மறைமாவட்ட உறவிய இயக்குநர் அருட்தந்தை அஜின் அவர்கள் தலைமையில் மாலை 5 மணிக்கு திருப்பலி நிறைவேற்றப்பட்டது. அதன் பின்பு சுமார் 7 மணியளவில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக அருட்தந்தை அஜின் அவர்கள் பங்குதந்தை லூக்கா கொல்லம்பறம்பில் CMI அவர்கள் தலைமையிலும் கூட்டம் நடைபெற்றது. சுமார் 8.30 மணியளவில் பொதுக்கூட்டம் நிறைவுபெற்றது. இறுதியில் அன்பின் விருந்து பரிமாறப்பட்டது. விழா ஏற்பாடுகளை பங்குதந்தை மற்றும் உறவிய பொறுப்பாளர்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.

## சூசைபுரம்

### தேவமாதா ஆலயம் – கிள்ளியூர்

***உணவுத்திருவிழா***

மிஷன் ஞாயிறை முன்னிட்டு 2022 நவம்பர் 06 ஞாயிற்றுக்கிழமை திருப்பலிக்குப் பின்னர் உணவுத்திருவிழா நடைபெற்றது. பங்குதந்தை அருட்தந்தை ஷாஜன் அவர்கள் உணவுத் திருவிழாவினை தொடக்க உரையாற்றி ஜெபித்து தொடங்கி வைத்தார். சூசைபுரம் மறைவட்டப்





முதன்மை பணியாளர் பேரருட்தந்தை ஆன்றனி ஜோஸ் சூசைபுரம் துணைப் பங்குத்தந்தை ஜோஸ் புரையிடத்துகுந்நேல் ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உணவுத்திருவிழாவில் பங்கெடுத்தனர் அருட்தந்தை ஷாஜன், அருட்சகோதரிகள், மாதர் ஜோதிஸ், மிஷன் லீக் பொறுப்பாளர்கள், மாணவர்கள் மற்றும் மறைக்கல்வி ஆசிரியர்கள் இணைந்து இதனை நடத்தினார்கள் ஏராளமான மக்கள் பங்கெடுத்து உணவுத் திருவிழாவினை வெற்றியடையச் செய்தனர்.

27.11.2022 அன்று ஞாயிற்றுக்கிழமை பருத்திவிளை சாந்தி நிலைய மாற்றுத்திறனாளிகளால் தயாரிக்கப்பட்ட பொருட்கள், நட்சத்திரங்கள், படங்கள் போன்றவை விற்பனை செய்தனர். இதை மக்கள் அதிகமாக வாங்கிச் சென்றனர்.

### கிறிஸ்து அரசர் ஆலயம் – பாலப்பள்ளம்

பங்கு பாதுகாவலர் திருவிழா நவம்பர் 11 ஆம் தேதி பங்குத்தந்தை அருட்தந்தை ஜாண்பால் அவர்கள் தலைமையில் கொடியேற்றத்துடன் தொடங்கி, நவம்பர் 20 ஆம் தேதி நிறைவடைந்தது. இரண்டாம் நாள் வாகன ஓட்டிகள் தினமாக அனுசரிக்கப்பட்டு பங்கில் உள்ள அனைத்து வாகனங்களும் மந்திரிக்கப்பட்டு அவர்களுக்கு ஜெபமாலையும் வழங்கப்பட்டது. மூன்றாம் நாள் திருவிழாவில் இராசைத் திருப்பலி நடைபெற்றது. மாலையில் மறைக்கல்வி மற்றும் பக்த இயக்கங்களின் ஆண்டு விழாவும் நடைபெற்றது. தொடர்ந்து, திருவிழா நாள்களில் உறவியங்களின் ஆண்டுவிழா, பக்த இயக்கங்களின் ஆண்டு விழா, நற்கருணை ஆராதனை போன்றவை மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

9 ஆம் நாள் பங்கிலிருந்து திருமணம் ஆகி சென்ற உறவினர்களின் தினமாக அனுசரிக்கப்பட்டது. தொடர்ந்து ஆடம்பரத் தேர்பவனியும் நடைபெற்றது. நிறைவு நாளான நவம்பர் 20 ஆம் தேதி ஆலய குடும்பவிழா மிகச் சிறப்பாக ஆயர் மேதகு மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB ஆண்டகை தலைமையில் முதல் திருவிருந்து வழங்குதல் நிகழ்வோடு நடைபெற்றது. உறவியத் தலைவர்களுக்கும் 25 ஆண்டுகளாக பங்கின் அனைத்து செயல்பாடுகளிலும் தன்னை ஈடுபடுத்திய திரு வர்கீஸ் அவர்களுக்கும் நினைவுப் பரிசு வழங்கப்பட்டது. மதியம் அன்பின் விருந்து மற்றும் மாலையில் கொடியிறக்கம் ஆகியவற்றோடு திருவிழா மிகச் சிறப்பாக நிறைவு பெற்றது. திருவிழாவில் அனைத்து நாட்களும் மாலையில் ஜெபமாலை கிறிஸ்து அரசர் நவநாள் மற்றும் திருப்பலி ஆகியவையும் நடைபெற்று. அனைத்து நாட்களிலும் இரவு நேர்ச்சை உணவும் வழங்கப்பட்டது.

பங்குப் பேரவை கூட்டமானது நவம்பர் 18 மற்றும் 26 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. முறையே முதல் கூட்டம் பாதுகாவலர் நிறைவு விழா குறித்தும் இரண்டாவது கூட்டம் கிறிஸ்து பிறப்பு விழா மற்றும் பங்கு பஜனை குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

### புனித வியாகப்பர் ஆலயம் – மாங்கரை

2.11.2022 அன்று இறந்தவர்களின் திருநாளை முன்னிட்டு அருட்தந்தை ஜோகேஷ் தலைமையில் மாலை 5.30 மணிக்கு ஆடம்பர திருப்பலியும் அதை தொடர்ந்து ஒப்பீசும் நடைபெற்றது

6.11.2022 திருப்பலிக்கு பின் திருப்பணியாளர்களுக்கான கூட்டம் அருட்தந்தை ஜோகேஷ் தலைமையில் நடைபெற்றது.

20.11.2022 அன்று மிஷன் ஞாயிறு மிக சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டன. திருப்பலியில் நடைபெற்ற காணிக்கைப் பவனியில் பங்கு மக்கள் அனைவரும் கலந்து கொண்டனர். திருப்பலியின் போது மிஷன் லீக் Emblem கொண்டு வரப்பட்டது. திருப்பலிக்கு பின் பொருட்கள் ஏலம் முடிந்தவுடன் பங்குதந்தை தலைமையில் மறைக்கல்வி ஆசிரியர்கள், மாணவர்கள், இறைமக்கள் சேர்ந்து மிக சிறப்பான முறையில் றாலி நடைபெற்றது.

## நித்திரவிளை

### புனித ஜார்ஜியார் திருத்தலம் – முஞ்சிறை

மிஷன் ஞாயிறை முன்னிட்டு இளைஞர்கள் வீடுகள்தோறும் சென்று



பல்வேறு உபயோகமுள்ள பொருட்களை சேகரித்து வந்து ஏலமிட்டனர். அந்நிகழ்வு மிகவும் வித்தியாசமான சிறப்பான நிகழ்வாக அமைந்தது அவற்றுள் உயிருள்ள மற்றும் உயிரற்ற பொருட்கள் அடங்கும் மக்கள் மிகுந்த ஆர்வமுடன் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

மாதத்தின் எல்லா வியாழக்கிழமையும் சிறப்புத் திருப்பலி மற்றும் நற்கருணை ஆராதனை வழிபாடும் நடைபெற்று வருகிறது.

பங்கின் பல்வேறு தேவைகளையும் வளர்ச்சியையும் கருத்தில் கொண்டு ஒரு பரிந்துரை ஜெப வழிபாடு நவம்பர் மாதத்திலிருந்து ஆரம்பமானது.

மிஷன் லீக் இயக்கத்தின் எழுச்சிப்பயணம் மறைவட்டம் தோறும் நடைபெற்று வருகிறது. இந்நிலையில் நித்திரவிளை மறைவட்டத்தில் வயலங்கரை ஆலயத்திலிருந்து முன்சிறை ஆலயத்திற்கு மிகுந்த உற்சாகத்துடன் வரவேற்கப்பட்டு ஒரு வாரம் அதற்காக ஜெபித்து வழியனுப்பினர். இந்நிகழ்வு நவம்பர் 13ம் தேதி நடைபெற்றது. நவம்பர் 20ஆம் தேதி காலைத் திருப்பலிக்குப் பின் வாறுதட்டு பங்கிற்கு எடுத்துச் செல்லப்பட்டது. இந்நிகழ்வில் அனைத்து மாணவர்களும் கலந்து கொண்டனர்.

### கிறிஸ்து அரசர் ஆலயம் – கிறிஸ்துராஜபுரம்

கிறிஸ்து அரசர் திருவிழா 14ம் தேதி துவங்கி மிகச்சிறப்பாக கொண்டாடப்பட்டு கிறிஸ்து அரசர் திருநாளுடன் நிறைவடைந்தது. ஜெபமாலை நவநாள் மற்றும் சிறப்புத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. திருவிழா அன்று இராசா திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. மக்கள் அனைவரும் மிகுந்த பக்தியோடு பங்கேற்று அருள் பெற்றுச் சென்றனர்

- **புனித சவேரியார் ஆலயம் – வாறுதட்டு**

2022 நவம்பர் 27 ம் தேதி பங்கு திருவிழா மற்றும் பாதுகாவலர் திருநாள் தொடங்கியது பங்குதந்தை அவர்களால் திருக்கோடியேற்றப்பட்டு தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

- **புனித அந்தோனியார் ஆலயம் – வயலங்கரை**

நவம்பர் 6 ஆம் தேதி வின்செந்திய உறுப்பினர்களுக்காக ஒரு மணி நேர ஆராதனை மற்றும் ஒப்புரவு வழிபாடு மாலை 3 முதல் 4 மணி வரை நடைபெற்றது.

நவம்பர் 20 ஆம் தேதி மாதர் ஜோதிஸ் உறுப்பினர்களுக்காக ஒரு மணி நேர ஆராதனை மற்றும் ஒப்புரவு வழிபாடு மாலை 3 முதல் 4 மணி வரை நடைபெற்றது ஏராளமான உறுப்பினர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

நவம்பர் 27 ஆம் தேதி மாலை 4.00 மணியளவில் திருப்பணியாளர்களுக்கான சிறப்புப் பயிற்சி நடைபெற்றது அன்று காலைத் திருப்பலிக்குப் பின் பொது மன்றம் நடைபெற்றது கிறிஸ்மஸ் பஜனை பாடுவது பற்றியும் பங்கின் கட்டிட அர்ச்சிப்பு விழாவின் 10 ம் ஆண்டுவிழாவைச் சிறப்பிப்பது பற்றியும் தீர்மானிக்கப்பட்டது.

மிஷன் லீக் எழுச்சிப் பயணச் சின்னத்திற்கு வரவேற்பு அளிக்கப்பட்டு ஜெபிக்கப்பட்டது. 6-ம் தேதி சீனிவிளையிலிருந்து வயலங்கரைக்கு எடுத்து வரப்பட்டு ஜெபித்து 13 ஆம் தேதி முன்சிறைக்கு வழியனுப்பப்பட்டது மிகுந்த உற்சாகமாக மாணவர்கள் கலந்து கொண்டனர்

**தகவல் சேகரிப்பு : திருமதி சினேக லதா I திருமதி ஹேமா I திருமதி செலின் மேரி I திருமதி ஷீலா, திருமதி, ஷைலா I மெரின் சுஜித்**

---

| FEASTDAYS OF REV. FATHERS - DECEMBER - 2022 | |
|---|---|
| Fr. Abilash Xavier Raj S | 03 |
| Fr. John Joseph | 27 |
| Fr. John Thekkel | 27 |
| Fr. Joshy Kulathumkal | 27 |
| Fr. Subin Scaria Puthenpurackal | 27 |

## இதர செய்திகள்

- தக்கலை மறைமவட்டத்தின் முன்னோடியாக இருந்த அருட்தந்தை குரியன் புத்தன்புரா, அருட்தந்தை ஆண்டனி போரூர்க்கார மற்றும் அருட்தந்தை. பிலிப் வைக்கத்துகாரன் ஆகியோர் தாங்கள் பணியாற்றிய முன்னால் பங்குகளை பார்வையிட்டனர்.
- மாங்கரை புனித வியாகப்பர் உயர்நிலைப்பள்ளியின் 44 வது ஆண்டு விழா 2022 நவம்பர் 24 அன்று நடைபெற்றது.
- பிலங்காலை CMI மலர் நிலைய பொன்விழா மற்றும் பேரருட்தந்தை தோமஸ் தெக்கத்தலா அவர்களின் குருத்துவ வெள்ளி விழா கொண்டாட்டம் 2022 நவம்பர் 24 அன்று நடைபெற்றது.
- நாகர்கோவில் புனித அல்போன்சா மெட்ரிக் உயர்நிலைப்பள்ளியின் 33 வது ஆண்டு விழா 2022 நவம்பர் 25 அன்று நடைபெற்றது.
- முக்கூட்டுக்கல் திருக்குடும்ப உயர்நிலைப்பள்ளியின் 54 வது ஆண்டு விழா 2022 நவம்பர் 25 அன்று நடைபெற்றது.
- அருட்சகோதரி மேரி டோம் FCC அவர்களின் சகோதரர் திரு. ஜோஸ் குட்டி (68) அவர்கள் 25.11.2022 அன்று நித்திய ஓய்விற்கு அழைக்கப்பட்டார். அதன் அடுத்த நாள் அவரது மனைவி திருமதி சலியம்மா ஜோஸ் நித்திய ஓய்விற்கு அழைக்கப்பட்டார் அவர்களது ஆன்மா சாந்தியடைய இறைவனிடம் வேண்டுவோம்.
- அருட்சகோதரி கிளேர்லெட் CMC அவர்களின் சகோதரர் திரு. ஜோஸ் வெல்லிச்சேரி (75) அவர்கள் 26.11.2022 அன்று நித்திய ஓய்விற்கு அழைக்கப்பட்டார். அவரது ஆன்மா சாந்தியடைய இறைவனிடம் வேண்டுவோம்.
- குளச்சல் கார்மல் ஜோதி மெட்ரிக் பள்ளியின் 23 வது ஆண்டு விழா 2022 நவம்பர் 28 அன்று நடைபெற்றது.
- ஆறுகாணி திருக்குடும்ப உயர்நிலைப்பள்ளியின் 48 வது ஆண்டு விழா 2022 நவம்பர் 30 அன்று நடைபெற்றது.
- அருட்தந்தை கொச்சுமோன் மாடபுரக்கல் கடந்த ஐந்து வாரங்களாக தேவையான மருத்துவ ஓய்வு எடுத்த பிறகு 2022 நவம்பர் 30 அன்று மீண்டும் மறைமாவட்டத்திற்கு வந்தார்.

| MONTHLY AGENDA – DECEMBER 2022 | | | |
|---|---|---|---|
| **DATE** | **DAY** | **TIME** | **EVENTS** |
| 2 | Fri | 08.30 am<br>09.30 am | Eparchial Bible Convention at Sinai Retreat Centre, Kalluvilai<br>One day convention at Vattakottai |
| 3 | Sat | 08.30 am | Eparchial Bible Convention at Sinai Retreat Centre, Kalluvilai |
| 4 | Sun | 08.30 am | Eparchial Bible Convention at Sinai Retreat Centre, Kalluvilai |
| 5 | Mon | 09.30 am<br>10.00 am<br>06.00 pm | KKSSS Golden Jubilee Celebration at Kalluvilai<br>Mathru Jyothis Food Fest at Kalluvilai<br>Soosaipuram Forane Priests' Conference |
| 6 | Tue | 09.30 am | Curia Meeting |
| 7 | Wed | 05.00 pm | Blessing of Chapel (Anbu illam, Tenkasi) & Charity Home at Pavoorchatram, Tenkasi |
| 9 | Fri | 10.00 am<br>02.30 pm | Marriage Preparation Course at Kalluvilai<br>SMYM: Jesus Youth Cultural exchange programme (Dec 9-28) |
| 10 | Sat | 09.30 am<br>10.00 am | Marriage Preparation Course at Kalluvilai<br>Pre-Christmas Gathering: Catechesis department at Kalluvilai |
| 11 | Sun | 09.00 am<br>09.30am | Sirumalar Ezhuchi Payanam in Thirunelveli & Tenkasi Missions<br>St Vincent De Paul Society Thuckalay Central Council Silver Jubilee and VAAN inauguration at Asaripallam |
| 12 | Mon | 10.00 am<br>12.30 pm<br>02.30 pm | Pre-Christmas Gathering: Charitable institutions at Sangamam<br>Pre-Christmas Gathering: Sychar Resource Centre at Sangamam<br>Pre-Christmas Gathering: Heads of the Institutions at Sangamam |
| 14 | Wed | | 9th Death Anniversary of Rev. Fr. Thomas Thekeyil |
| 15 | Thu | 10.00 am | Pre-Christmas Gathering: Missionaries of Extended territories at Madurai |
| 16 | Fri | 08.00 pm | Pre-Christmas Gathering: Migrants at Sangamam |

| | | | |
|---|---|---|---|
| 17 | Sat | 09.30 am<br>09.30 am<br>10.00 am<br>02.00 pm<br>06.00 pm | One day Convention at Sinai Retreat Centre, Kalluvilai<br>Mathru Jyothis Carol Song Competition at Kalluvilai<br>Pre-Christmas Gathering: CRI at Nithiravilai<br>Pre-Christmas Gathering: Family Apostolate at Kalluvilai<br>Pre-Christmas Gathering: Tenkasi Mission |
| 18 | Sun | 01.00 pm<br>02.30 pm<br>03.00 pm<br>04.30 pm | Blessing of Presbytery at Paraicode<br>Pre-Christmas Gathering: Educare at Kalluvilai<br>Pre-Christmas Gathering: Sinai Theology students at Kalluvilai<br>Pre-Christmas Gathering: SMYM at Thettiyodu |
| 19 | Mon | 04.30 pm | Priests' Conference & Christmas Gathering at Sangamam |
| 20 | Tue | 11.30 am | Pre-Christmas Gathering: Nambikkai Alayam at Kazhuvanthittai |
| 21 | Wed | 06.00 pm | Pre-Christmas Gathering: Friends & Well-wishers at Sangamam |
| 22 | Thu | 01.00 pm<br>06.00 pm | Pre-Christmas Gathering: Major Seminarians at Sangamam<br>Pre-Christmas Gathering: Seeds & Minor Seminary at Mukkoottukal |
| 23 | Fri | 04.00 pm | Kids' day celebration at Soosaipuram |
| 24 | Sat | 11.00 am | Christmas Crib Photo Competition by Pulari Communications |
| 27 | Tue | 09.00 am<br>02.30 pm | Forane level Bible Fest Competition: Arukani and Manjalumoodu<br>Former and Current Central Executives Gathering at Kalluvilai |
| 28 | Wed | 09.00 am<br>09.30 am | Forane level Bible Fest Competition: Soosaipuram and Thuckalay - Pilankalai<br>Curia Meeting |
| 29 | Thu | 09.00 am | Forane level Bible Fest Competition: Nithiravilai and Padanthalumoodu |
| 30 | Fri | 09.00 am | Forane level Bible Fest Competition: Kaliyal |
| 31 | Sat | 09.30 am | SMYM: Training & Post Christmas Celebration of Central Team at Kalluvilai |

From the Eparchial Chancery

## BISHOP'S ENGAGEMENTS - DECEMER 2022

| DATE | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| 1 | Thu | 7.00 am<br>10.00 am | Changanaserry: Thuruthi, Anniversary Holy Qurbana<br>Meeting with Benefactors |
| 2 | Fri | 09.30 am<br>10.30 am<br>05.00 pm | Kalluvilai: Bible Convention<br>Golden Jubilee of St. Xaviers College<br>Padanthalumoodu: Sacred Heart Higher Secondary school Annual day |
| 3 | Sat | 09.30 am | Kalluvilai: Bible Convention |
| 4 | Sun | 09.30 am | Kalluvilai: Bible Convention |
| 5 | Mon | 09.30 am<br>06.00 pm | Kalluvilai: KKSSS Golden Jubilee Celebration<br>Meeting with Forane Priests Soosaipuram |
| 6 | Tue | 09.30 am<br>05.00 pm | Curia meeting<br>Trivandrum: Christ Nagar School Pre-Christmas and Annual day Celebration |
| 7 | Wed | 05.00 pm | Thenkasi Mission: Chapel and charitable home blessing |
| 8 | Thu | 07.00 am<br>01.00 pm | Thuckalay: Feast Day Holy Qurbana, CMC Provincial House<br>>> Trichy |
| 9 | Fri | 10.00 am | Trichy: CHAT Extended Board meeting >> Thuckalay |
| 10 | Sat | 09.00 am<br>10.00 am<br>02.00 pm | Thuckalay: Inauguration STEAM learning<br>Kalluvilai: Pre-Christmas gathering with Catechism Headmasters<br>Nagercoil, Palpannai: UCC Christmas Gathering at LMS Church |
| 11 | Sun | 09.00 am | St Vincent De Paul Society Silver Jubilee and VAAN inauguration |
| 12 | Mon | 10.00 am<br>12.30 pm<br>02.30 pm | Sangamam: Christmas Gathering with Charitable institutions<br>Sangamam: Christmas Gathering with the staff of Kozhiporvilai<br>Sangamam: Christmas Gathering with the Heads of the Institutions |
| 13 | Tue | 05.00 am | >> Mankulam, Idukki |

| | | | |
|---|---|---|---|
| 14 | Wed | 07.00 am | Mankulam: Rev. Fr Thomas Thekkel's death Anniversary >> Madurai |
| 15 | Thu | 10.00 am | Madurai: Christmas Gathering with the Missionaries of Extended territories |
| 16 | Fri | 06.00 pm | Mylode: Neyyoor UCC Christmas Gathering |
| 17 | Sat | 10.00 am<br>06.00 pm | Nithravilai: Christmas Gathering with CRI sisters<br>Thenkasi: Mission Christmas gathering |
| 18 | Sun | 09.30 am<br>01.00 pm<br>02.30 pm<br>04.30 pm | Ramanputhur: Kottar Health commission medical camp<br>Paraicode: Presbytery Blessing<br>Kalluvilai: Educare Christmas celebration<br>Padanthalumoodu: SMYM Christmas gathering |
| 19 | Mon | 04.30 pm | Sangamam: Priests' Conference and Christmas Gathering with Presbyterium |
| 20 | Tue | 09.30 am<br>11.30 am | Kaliakkavilai: Christmas celebration at Nanjil College<br>Kazhuvanthittai: Christmas gathering with Nambikkai Alayam |
| 21 | Wed | 02.30 pm<br>05.00 pm | Sangamam: Christmas Gathering with the Well-wishers and Friends<br>Karungal: Golden Jubilee of Fr Innocent |
| 22 | Thu | 11.00 am<br>01.00 pm<br>06.00 pm | Arumanai: Pre-Christmas Celebrating and Marriage Ceremony<br>Sangamam: Christmas Gathering with Major Seminarians<br>Mukootukal: Christmas Gathering with Seeds and Minor Seminarians |
| 23 | Fri | 12.30 pm<br>04.00 pm<br>07.00 pm | Bishop's House: Christmas Gathering with Bishop's House and Sangamam<br>Soosaipuram: Kids Day celebration<br>Bishop's House: Christmas Gathering with the Neighborhood |
| 24 | Sat | 10.30 pm | Manjalumoodu: Christmas Holy Qurbana |
| 25 | Sun | | Happy Christmas |

| | | | |
|---|---|---|---|
| 26 | Mon | 10.00 am<br>05.00 pm | Thirutuvapuram: Marriage Holy Qurbana<br>Chitharal: CSI Church Day Celebration |
| 27 | Tue | 07.00 pm | Kalluvilai: Meeting with SMYM Executives |
| 28 | Wed | 09.30 am | Curia meeting |
| 29 | Thu | 10.30 am<br>03.30 pm | Vadakkankulam: Marriage Holy Qurbana<br>Thakkalivilai: First Holy Communion Holy Qurbana |
| 30 | Fri | 05.00 pm | Arukani: Feast day Holy Qurbana |
| 31 | Sat | | Palai: First Holy Communion Holy Qurbana |

Rev. Fr. Robin Jose, Bishop's Secretary

| BIRTHDAY OF REV. FATHERS- DECEMBER - 2022 | |
|---|---|
| Fr. Jose Kanachikuzhiyil | 03 |
| Fr. Alex Puthettu | 26 |
| Fr. Anto Thunduparampil CMI | 17 |
| Fr. Joseph Anithottam CMI | 18 |
| Fr. Antony Jose | 18 |
| Fr. Matheus Robert | 26 |
| Fr. Rony Peedikakal MCBS | 26 |



MATRU JYOTHIS, DANCE COMPETITION,
KALLUVILAI, 05.11.2022



JYOTI CENTRE, Golden Jubliee Memorial, ANIMATION
CENTRE BLESSING, PADANTHALUMOODU, 25.11.2022



MISSION LEAGUE, DIAMOND JUBILEE PREPARATORY
MEETING, PADANTHALUMOODU 20.11.2022



SINAI THEOLOGICAL INSTITUTE, DEGREE & DIPLOMA HOLDERS, PADANTHALUMOODU, 13.11.2022



PASTORAL COUNCIL, SANGAMAM, 01.11.2022

For Private Circulation Only

IRAI ARUL, The Official Organ of the Diocese of Thuckalay

Published by: Fr. Joseph Santhosh for the Diocese of Thuckalay,

Bishop's House, Post Box No. 12, Thuckalay - 629175

Printed at: Pulari Offset Press, Thuckalay 629175, Ph. 04651-252570